# பட்டுக்கோட்டை நகர்மன்றம்

**ஸ்ரீ பிலவ வருடம் ஐப்பசி மாதம் 12–ம் தேதி திருவள்ளுவராண்டு 2052 (2021–ம் ஆண்டு அக்டோபர் 29–ம் தேதி) வெள்ளிக் கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை .. திரு. அ. வீரமுத்துக்குமார், பி.டெக்.,**
**தனி அலுவலர்/ ஆணையர்**

**பொருள் எண்..1**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு கோட்டம் I,II, மற்றும் III–ல் உள்ள Bov & LCV வாகனங்களுக்கான பேட்டரிகள் 7 எண்ணிக்கை பழுது அடைந்து விட்டதால் வாகனங்க் இயக்க இயலாத நிலையில் உள்ளதாக பொது சுகாதார அலுவலர் அவர்கள் நேரடியாக தெரிவித்ததின் பெயரில் வாகனம் ஆய்வு செய்யப்பட்டு வாகனம் இயக்குவதற்கான 7 எண்ணிக்கை பேட்டரிகள் கொள்முதல் செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ. 4,90,000/–க்கு நிர்வாக அனுமதி வழங்கவும் மற்றும் விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு மேலும் இப்பணிக்கான செலவினத்தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | 1).பொது நிதியின் கீழ் பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>2).பொது சுகாதார பணியின் அவசியம் கருதி முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும் ஒப்புதல் வழங்கலாம்.<br>(ந.க.எண். 2192 / 2021 /இ1) |

**தீர்மானம் எண்..215 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**பொருள் எண்..2**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பெருமாள் கோவில் நகராட்சி நடுநிலைப்பள்ளியின் தலைமை ஆசிரியர் கொடுத்துள்ள கோரிக்கை மனுவின் பெயரில் ஆய்வு செய்யப்பட்டது. பள்ளிகள் திறக்கப்படவுள்ளதால் பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர் பயன்பாட்டுக்கு கொண்டு வர சிறு சிறு பழுது நீக்கமாகிய குடிநீர்வசதி, கழிப்பறைகள் பழுது நீக்கம், மழைநீர் வடிகால் குழாய் உடைப்பு சரி செய்தல் மற்றும் மாணவர்கள் நடப்பதற்கு ஏதுவாக தற்காலிக சாலை அமைத்தல் போன்ற பணிகள் செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும், மற்றும் மேற்படி பணிக்கான செலவினத்தொகையை நகராட்சி கல்வி நிதியிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | 1). கல்வி நிதியின் கீழ் பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| | 2). மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றஅனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3970 / 2021 /இ1) |

**தீர்மானம் எண்..216 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

## பொருள் எண்..3

இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள வளவன்புரம் நகராட்சி பள்ளியின் தலைமை ஆசிரியர் கோரிக்கை வைத்ததின் பெயரில் பள்ளியிலுள்ள கழிப்பறை மற்றும் மாணவர்கள் நடப்பதற்கு ஏதுவாக தற்காலிக நடைப்பாதை அமைக்க வேண்டி இடம் ஆய்வு செய்யப்பட்டது. மழைக்காலங்களில் மாணவர்கள் நடக்க இயலாத சூழ்நிலையில் இருப்பதால் தற்காலிக நடைப்பாதை அமைக்கவும் கழிப்பறை பழுது நீக்கம் செய்யவும் உத்தேச மதிப்பீடு ரூ.1.90 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும், மற்றும் மேற்படி பணிக்கான செலவினத்தொகையை நகராட்சி கல்வி நிதியிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலக குறிப்பு | 1). கல்வி நிதியின் கீழ் பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
|---|---|
| | 2). மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றஅனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 2660 / 2021 /இ1) |

**தீர்மானம் எண்..217 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

## பொருள் எண்..4

இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள பாளையம் நகராட்சி நடுநிலைப்பள்ளிலுள்ள சத்துணவு கூடம் மற்றும் வகுப்பறைகள், கழிப்பறைகள் பார்வையிடப்பட்டது. மேற்காணும் பள்ளிகள் திறக்கப்பட இருப்பதால் முதற்கட்டமாக மாணவ, மாணவியர்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டிய உள்ளதால் மேற்படி பராமரிப்பிற்கான உத்தேச மதிப்பீடு ரூ.2.40 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும், மற்றும் மேற்படி பணிக்கான செலவினத்தொகையை நகராட்சி கல்வி நிதியிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலக குறிப்பு | 1). கல்வி நிதியின் கீழ் பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
|---|---|
| | 2). மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றஅனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் 3948 / 2021 /இ1) |

**தீர்மானம் எண்..218 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**பொருள் எண்..5**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சிவக்கொல்லை நகராட்சி தொடக்கப்பள்ளி,முஸ்லிம் தெரு நகராட்சி பள்ளிகள் திறக்கப்படவுள்ளதால் மேற்படி பள்ளிகள் ஆய்வு செய்யப்பட்டது. மேற்கண்ட இரண்டு பள்ளிகளிலும் பயிலும் மாணவ மாணவியர் பயன்பாட்டுக்கு கொண்டு வர சிறு பழுது நீக்கம் செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. ஆகவே இதனை உடனடியாக செய்ய வேண்டிய அவசியம் உள்ளதால் இப்பணியினை மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.1.80 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும், மற்றும் மேற்படி பணிக்கான செலவினத்தொகையை நகராட்சி கல்வி நிதியிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | 1). கல்வி நிதியின் கீழ் பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| | 2). மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றஅனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 2659 / 2021 /இ1) |

**தீர்மானம் எண்..219 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**பொருள் எண்..6**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு கோட்டம் I,II, மற்றும் III–ல் உள்ள Bov & LCV வாகனங்கள் பழுது அடைந்து விட்டதால் வாகனங்கள் இயக்க இயலாத நிலையில் உள்ளதாக பொது சுகாதார அலுவலர் அவர்கள் நேரடியாக தெரிவித்ததின் பெயரில் மேற்படி வாகனங்களுக்கு பழுது நீக்கம் செய்ய வேண்டியதற்கான உத்தேச செலவினம் ரூ.3,80,000/–க்கு நிர்வாக அனுமதி வழங்கவும் மற்றும் விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு மேலும் இப்பணிக்கான செலவினத்தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | 1).பொது நிதியின் கீழ் பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>2).பொது சுகாதார பணியின் அவசியம் கருதி முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரிமைக்கும் ஒப்புதல் வழங்கலாம்.<br>(ந.க.எண். 2123 / 2021 /இ1) |

**தீர்மானம் எண்..220 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**<u>பொருள் எண்.. 7</u>**

இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள ஆதித்தெருவில் இருக்கும் நகராட்சி பள்ளி மற்றும் அந்தோணியார் கோவில் தெருவில் உள்ள பள்ளிகள் தேர்தல் அவசரம் காரணமாக பள்ளிகள் ஆய்வு செய்யப்பட்டது. மேற்படி பள்ளியில் மேற்கூரையில் மழைநீர்கசிவு ஏற்படுகிறது. மின்விளக்குகள் மற்றும் மின்விசிறிகள் மாற்றம் செய்து தருவதுடன் மேலும் தேர்தல் குறித்து சாய்வு தளம் அமைக்கப்பட வேண்டும். மேற்காணும் பணிகள் செய்து முடித்தால் வாக்குச்சாவடிகள் தயார் நிலையில் அமைந்து விடும்,ஆகவே இப்பணியினை செய்ய ஆதித்தெரு மற்றும் அந்தோணியார் கோவில் தெரு ஆகிய நகராட்சி பள்ளிக்கு பராமரிப்பு பணி செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும், மற்றும் மேற்படி பணிக்கான செலவினத்தொகையை நகராட்சி கல்வி நிதியிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | 1). கல்வி நிதியின் கீழ் பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| | 2). மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றஅனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் 2724 / 2021 /இ1) |

**தீர்மானம் எண்..221 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**<u>பொருள் எண்.. 8</u>**

இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவு மற்றும் பொறியியல் பிரிவு ஆகியவற்றில் பொது இடங்களில் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி பொதுமக்கள் அவதியுறும் காலங்களில் தேங்கியுள்ள மழைநீரை அப்புறப்படுத்த ஆயில் இஞ்சின் அவசியம் தேவைப்படுகிறது. தேவைப்படும் போது வாடகைக்கு எடுத்து பயன்படுத்தப்பட்டு வந்தது.தற்போது தொடர் மழை காரணமாக வாடகைக்கு எடுத்து பயன்படுத்துவதை விட புதிதாக ஆயில் இஞ்சின் வாங்கினால் நகராட்சிக்கு நிதி சுமையின் தாக்கம் குறையும் ஆகவே தொடர் மழைக்காக மட்டுமில்லாது குடிநீர் பராமரிப்பு பணி செய்யும் காலங்களிலும் இந்த ஆயில் இஞ்சின் பயன்படுத்த ஏதுவாக அமையும் ஆகவே 5HP ஆயில் இஞ்சின் 1 எண்ணிக்கையும், 7.5 HP ஆயில் இஞ்சின் 1 எண்ணிக்கையும் இவ்விரண்டும் வாங்க உத்தேச மதிப்பீடு ரூ.2.75 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும், மற்றும் மேற்படி பணிக்கான செலவினத்தொகையை நகராட்சி பொது நிதியிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | 1). பொது நிதியின் கீழ் பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| | 2). மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றஅனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் 2703 / 2021 /இ1) |

**தீர்மானம் எண்..222 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**<u>பொருள் எண்.. 9</u>**

இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள நரியம் பாளையம் மற்றும் ஜெயாலயம் நகராட்சி பள்ளிகள் திறப்பு மற்றும் தேர்தல் குறித்து பள்ளிகள் ஆய்வு செய்யப்பட்டு பள்ளி தலைமை ஆசிரியர் அவர்களுடன் கலந்து ஆலோசித்து பள்ளிக்கு தேவையான பணிகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு மேற்காணும் பள்ளிகளில் சிறு சிறு பழுதுகள் நீக்கம் செய்ய இருப்பதால் உத்தேச மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும், மற்றும் மேற்படி பணிக்கான செலவினத்தொகையை நகராட்சி கல்வி நிதியிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | 1). கல்வி நிதியின் கீழ் பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| | 2). மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றஅனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் 2698 / 2021 /இ1) |

**தீர்மானம் எண்..223 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**<u>பொருள் எண்.. 10</u>**

பட்டுக்கோட்டை நகராட்சியில் 2020–21–ஆம் ஆண்டில் நடைபெற்று வரும் பணிகளின் விபரம் தினகரன் தொழில் மலரில் தினசரி பிரசுரம் செய்யப்பட்டதற்கான விளம்பரக்கட்டணம் ரூ.18,900/–ஐ பொது நிதியிலிருந்து KAL PUBLICATIONS PVT LTD என்ற நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண் .3256 /2021/இ1) |

**தீர்மானம் எண்..224 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**<u>பொருள் எண்.. 11</u>**

பட்டுக்கோட்டை நகராட்சியில் 2020–21–ஆம் ஆண்டில் நடைபெற்று வரும் பணிகளின் விபரம் தினகரன் தொழில் மலரில் தினசரி பிரசுரம் செய்யப்பட்டதற்கான விளம்பரக்கட்டணம் ரூ.36729/–ஐ பொது நிதியிலிருந்து THE DAILY THANTHI என்ற நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்3256/2021/இ1) |

**தீர்மானம் எண்..225 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**<u>பொருள் எண்.. 12</u>**

பட்டுக்கோட்டை நகராட்சியில் உள்ள கீழ்கண்ட குளங்கள் மேம்பாடு செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | பணியின் பெயர் | பணியின் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| **1** | 30 | நாடியம்மன் குளம் மேம்பாடு செய்யும் பணி. | 1 | 255.00 |
| **2** | 32 | ராமசாமி குளம் மேம்பாடு செய்யும் பணி. | 1 | 200.00 |
| **3** | 9 | உத்தண்டிக்குளம் மேம்பாடு செய்யும் பணி. | 1 | 115.00 |
| **4** | 2 | முதலிக்குளம் மேம்பாடு செய்யும் பணி. | 1 | 200.00 |
| | | **கூடுதல் ரூ.** | **4** | **770.00** |

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | 1) மதிப்பீடுகளுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) அரசு முழு மான்யம் பெற ஏதாவது ஒரு திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு வழங்கிட கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம். |
| | 3) மேலும் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று கருத்துரு அனுப்பிட மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். 2825 /2021/இ1) |

**தீர்மானம் எண்..226 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**<u>பொருள் எண்.. 13</u>**

இந்நகராட்சி சாந்தாங்காடு நீரேற்று நிலையம், கொண்டிகுளம் நீரேற்று நிலையம் கரிக்காடு மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி, லெட்சத்தோப்பு மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி,வளவன்புரம் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிஆகியவற்றில் உள்ள குளோரின மின்மோட்டார் பழுது மேற்கொள்ளும் பணிக்கு 05.10.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப் புள்ளி களின் சதவீதம் (மதிப் பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சி சாந்தாங்காடு நீரேற்று நிலையம், கொண்டிகுளம் நீரேற்று நிலையம் கரிக்காடு மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி, லெட்சத்தோப்பு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி, வளவன்புரம் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி ஆகியவற்றில் உள்ளகுளோரின்மின்மோட்டார்பழுது மேற்கொள்ளும் பணி. | ரூ.2,25,000/– | எஸ்.கணேசன் பட்டுக் கோட்டை | 0.35 % குறைவு |
| | | | கே.எடிசன் பட்டுக் கோட்டை | 3.86 % அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை எஸ்.கணேசன்,ஒப்பந்ததாரர், பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ளார். இவ்ஒப்பந்தப்புள்ளியானது கே,எடிசன் ஒப்பந்ததாரர், பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை விட குறைவாக உள்ளது. ஆகவே எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்களது ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு.. | 1).வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) இப்பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவரின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மற்றும் மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண். 3223/2021 /இ2) |

**தீர்மானம் எண்..227 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**<u>பொருள் எண்.. 14</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி தேர்வு நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு 21.83 சதுர கி.மீ ஆகும். மொத்த வார்டுகள் 33 ஆகும். 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 73135 மக்கள் தொகை கொண்டது.

பட்டுக்கோட்டை நகராட்சியில் மொத்தம் 3989 தெரு விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| வ.எண் | தெரு விளக்குகள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | LED தெரு விளக்குகள் | 3484 |
| 2. | சோடியம் ஆவி விளக்குகள் | 502 |
| 3. | உயர் மின் கோபுர விளக்குகள் | 03 |
| | **மொத்தம்** | **3989** |

பட்டுக்கோட்டை நகராட்சி தெரு விளக்கு பராமரிப்பு பணிகள்2018–ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் மின் சேமிப்பு அவசியம் முன்னிட்டு LED மின் விளக்குகளாக மாற்றம் செய்து ESCO திட்டத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. தானியங்கி மின் இணைப்புகள் 212 எண்ணம் பொருத்தப்பட்டு உள்ளது.

தற்பொழுது புதியதாக அமைக்கப்பட்டுள்ள சாலைகள் மற்றும் விடுபட்டுள்ள வார்டு பகுதிகளில் உள்ள தெருக்களில் புதிதாக 135 எண்ணம் 20 வாட்ஸ் LED தெரு விளக்குகள் அமைப்பதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.6.00இலட்சத்திற்கும் மற்றும் புதிதாக 65 எண்ணம் 20வாட்ஸ் LED தெரு விளக்குகள் மற்றும் மின்பாதை அமைப்பதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கும் நிர்வாக அனுமதி வழங்கவும் மற்றும் மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மானியமாக வழங்க கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துருவினை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலக குறிப்பு.. | 1) மதிப்பீடுகளுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம். |
|---|---|
| | 2)மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்..449/2021/இ2) |

**தீர்மானம் எண்..228.. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**<u>பொருள் எண்.. 15</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி தேர்வு நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு 21.83 சதுர கி.மீ ஆகும். மொத்த வார்டுகள் 33 ஆகும். 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 73135 மக்கள் தொகை கொண்டது.'

பட்டுக்கோட்டை நகராட்சியில் மொத்தம் 3989 தெரு விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| வ.எண் | தெரு விளக்குகள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | LED தெரு விளக்குகள் | 3484 |
| 2. | சோடியம் ஆவி விளக்குகள் | 502 |
| 3. | உயர் மின் கோபுர விளக்குகள் | 03 |
| | **மொத்தம்** | **3989** |

பட்டுக்கோட்டை நகராட்சி தெரு விளக்கு பராமரிப்பு பணிகள்2018–ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் மின் சேமிப்பு அவசியம் முன்னிட்டு LED மின் விளக்குகளாக மாற்றம் செய்து ESCO திட்டத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. தானியங்கி மின் இணைப்புகள் 212 எண்ணம் பொருத்தப்பட்டு உள்ளது.

தற்பொழுது புதியதாக சென்டர் மீடியம் தெரு விளக்குகள் 20வாட்ஸ் LED 35 எண்ணம் அமைப்பதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.17.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும் மற்றும் மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மானியமாக வழங்க கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துருவினை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலக குறிப்பு.. | 1) மதிப்பீடுகளுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம். |
|---|---|
| | 2)மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்..449/2021/இ2) |

**தீர்மானம் எண்..229 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**<u>பொருள் எண்.. 16</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமானதும் மற்றும் பாத்தியப்பட்டதுமான வண்டிப்பேட்டைக்கு வந்து போகும் வண்டிகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 2021–2024ம் ஆண்டுகளுக்கு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகள் வரை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கலந்து கொள்ள 21.10.2021ம் தேதியன்று ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதல் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.அவற்றின் விபரம் பின்வருமாறு.

| வரிசை எண் | ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களின் முகவரி மற்றும் விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு.பி.டி.அமிர்தலிங்கம்<br>த/பெ பி.தங்கையா<br>13,இராமலிங்கபுரம் 6வது தெரு,<br>தங்கவேல் நகர்<br>பட்டுக்கோட்டை–614 601. | ரூ.3,53,090/– |
| 2 | திரு.டி.சேகர்<br>த/பெ தர்மராஜ்<br>193/20,எஸ்.ஆர்.சீனிவாசன்பிள்ளை நகர்<br>லெட்சத்தோப்பு<br>பட்டுக்கோட்டை–614 601. | ரூ.3,42,000/– |

மேற்கண்டவாறு, இரண்டு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.பி.டி.அமிர்தலிங்கம் என்பவர் ரூ.3,53,090/–க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். இந்த ஒப்பந்தப்புள்ளியானது கடந்த 2020–2021ம் ஆண்டின் ஒப்பந்தப்புள்ளி தொகையை விட 5 சதவீதம் கூடுதலாகும். எனவே, திரு. பி.டி.அமிர்தலிங்கம் என்பவர் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.3,53,090/–ஐ ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு.. | 1.)மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2.) பணியின் அவசரம் அவசியம் கருதி தனிஅலுவலர் முன்னனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>(ந.க.எண்.356/2021/அ2–9) |

**தீர்மானம் எண்..230 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**<u>பொருள் எண்.. 17</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 33 வார்டுகளிலும் சாலையோரங்களில் உள்ள தரைக்கடைகளில் கட்டணம் வசூல் செய்வது தொடர்பாக நகர்மன்ற தீர்மான எண்..152, நாள்.. 30.07.2021ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனை தஞ்சாவூர் அரசு நாளிதழில் பிரசுரம் ெய்ய பிரசுரக் கட்டணம் ஒரு பக்கத்திற்கு ரூ.2100/–வீதம் இரு பக்கங்களுக்கு ரூ.4200/–ஐ செலுத்தக் கோரி கிளை மேலாளர், அரசு அச்சகம், புதுக்கோட்டையிலிருந்து கேட்பு வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட தொகை ரூ.4200/–ஐ செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு.. | 1.)மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2.) பணியின் அவசரம் அவசியம் கருதி தனிஅலுவலர் முன்னனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவதை மன்றம் அங்கீகரிக்கலாம். |

**தீர்மானம் எண்..231 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**<u>பொருள் எண்.. 18</u>**

அரசு தலைமை செயலாளர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்..860/Special-B/2021 ,dt: 25.09/2021–ல் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை ஏற்பாடாக நகர் பகுதியில் உள்ள சிறு பாலங்கள் சுத்தம் செய்தல், தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்காதவண்ணம் உடன் அப்புறப்படுத்துதல் மற்றும் அதற்கான உபகரணங்கள், குடிநீர், மின்சாரம், துப்புரவு தளவாடப் பொருட்கள், தற்காலிக தங்குமிடம் ஆகியவை தயார் நிலையில் வைத்திருக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து கீழ்க்கண்ட தளவாட உபகரணங்கள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டியுள்ளது.

| வ.எண் | தளவாட பொருட்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மண்வெட்டி | 30 |
| 2. | கடப்பாறை | 15 |
| 3. | சாக்கடை சுரண்டி | 40 |
| 4. | அலுமினிய சட்டி | 150 |
| 5. | மூங்கில் கூட்டு மிளார் | 200 |
| 6. | விளக்குமாறு | 500 |
| 7. | அரிவாள் | 15 |
| 8. | வாங்கு அரிவாள் | 10 |
| 9. | மூன்று பல் கொக்கரை | 60 |

மேற்கண்ட தளவாட உபகரணங்களை உடன் சப்ளை செய்யும் பொருட்டு அவசர, அவசியங் கருதி 1920ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15ன் கீழ் அரசு சார்புடைய கூட்டுறவு நிறுவனமான தமிழ்நாடு மல்டி பர்பஸ் இன்ட்கோ சர்வ், திருச்சி நிறுவனத்தாரிடமிருந்து நேரடியாக சப்ளை செய்திடவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.3.00லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மானம் எண்..232 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**<u>பொருள் எண்.. 19</u>**

அரசாணை (நிலை) எண்..168, நாள்.. 16.11.2015–ல் தெரிவித்துள்ளவாறு, 2021–2022–ம் ஆண்டு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் ஆண் மற்றும் பெண் துாய்மைப் பணியாளர்களுக்கு சீருடை, தையல்கூலி வழங்கும்பொருட்டு, சீருடையினை அரசு சார்புடைய நிறுவனத்தாரிடமிருந்து சப்ளை செய்திடவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.4.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,.. | 1) அனுமதிக்கலாம்.<br><br>2) அவசரம் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும், உத்தேச செலவு ரூ.4.00இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>3) செலவினத்தினை பொது நிதி மூலம் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.. 4216/2019 /எச்1) |

**தீர்மானம் எண்..233 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**பொருள் எண்.. 20**

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் 17.09.2021–ம் தேதிய ந.க.எண்..4389/2021/தமா2 எண்ணிட்ட கடிதத்தில், பட்டுக்கோட்டை கிராமம் மற்றும் நகராட்சி வார்டு–A, பிளாக்–4 நகர புலஎண்..28/20 (பழைய நகரளவு எண்..28/1) பழைய புலஎண்கள்..159B/2. 164-1-ல் 12875 ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்புக்கான மனைப்பிரிவு அமைத்துக்கொள்ள சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் செய்து வரப்பெற்றுள்ள கடிதம் மற்றும் சாலை அமைப்பு வரைபடம் மன்றத்தின் பார்வைக்கும், அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

மேலும் மனைப்பிரிவின் உரிமையாளர் திரு M.S.ராஜேந்திரன் அவர்களின் முகவரான (பவர் ஏஜென்ட்) திரு.ஜி.ஸ்ரீதரன் என்பவர் மனைப்பிரிவில் அமையும் சாலை, மூலை முடக்கு, பூங்கா மற்றும் உள்ளாட்சிக்கு ஒப்படைக்க வேண்டிய பொது இடம் ஆகியவற்றினை சார் பதிவாளர் எண்..1, பட்டுக்கோட்டை அவர்களின் பத்திர பதிவு ஆவண எண்..1740/2021, நாள்.. 29.10.2021–ல் பட்டுக்கோட்டை நகராட்சி ஆணையர் பெயரில் பதிவு செய்து தானபத்திரம் மூலம் நகராட்சி வசம் ஒப்படைத்துள்ளார். மேற்படி ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள தானபத்திரம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,.. | 1) நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், தஞ்சாவூர் அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்ட உத்தேச மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடத்தினை மன்றம் அனுமதிக்கலாம். |
| | 2) சாலை, மூலை முடக்குகள், பூங்கா மற்றும் உள்ளாட்சிக்கு ஒப்படைக்க வேண்டிய பொது இடம் ஆகியவற்றினை தானபத்திரம் மூலம் பெற்றுக்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.. 3412/2021 /எப்1) |

**தீர்மானம் எண்..234 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**பொருள் எண்.. 21**

அரசு தலைமை செயலாளர் , சென்னை, அவர்களின், கடித ந.க.எண்.860/Special - B/2021 நாள்..25.09.2021-ன்படி வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை ஏற்பாடாக நகர் பகுதியில் உள்ள சிறு பாலங்கள் சுத்தம் செய்தல், தாழ்வான பகுதிகளில் தேங்கியுள்ள மழை நீரை அப்புறப்படுத்தல், போன்ற பணிகளை போர்கால அடிப்படையில் மேற்கொண்டு அப்பகுதியில் பொதுமக்களுக்கு தொற்று ஏற்படாத‘வண்ணம் கிருமி நாசினிகளை தெளித்து தூய்மை பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது. இப்பணிக்காக கீழ்கண்ட விபரப்படியான கிருமி நாசினிகள் சப்ளை செய்து வழங்க வேண்டியுள்ளது.

| வ எண் | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நீர்த்த சுண்ணாம்பு | 20000 கி |
| 2 | பிளீச்சிங் பவுடர் | 3000 கி |
| 3 | கருப்பு பினாயில் | 1000 லி |

இயற்கை இடர்பாடுகள் அவசர, அவசியம் கருதி மேற்படி கிருமி நாசினிகளை உடன் சப்ளை செய்து தரும் பொருட்டு, தமிழ்நாடு அரசு தொழில் வணிகத்துறை, நேரடி கட்டுபாட்டில் இயங்கி வரும், தமிழ்நாடு மல்டி பர்பஸ் இன்கோ சர்வ், திருச்சி நிறுவனம் மூலம் விலைப்புள்ளி மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோராமல் நேரடியாக கொள்முதல் செய்து கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் **ரூ. 5.00** லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்...1121/2021/எச்1 |

**தீர்மானம் எண்..235 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**ஒம்/வீரமுத்துக்குமார்**
தனி அலுவலர்/ஆணையர்
பட்டுக்கோட்டை நகராட்சி

**/உண்மை நகல்/**

ஆணையாளர்
பட்டுக்கோட்டை நகராட்சி

# PATTUKKOTTAI MUNIC IPALITY
# ULB ELECTION – 2021
# ELECTION L